**PRIMARY SCHOOL**

**SEMESTRAL ASSESSMENT 2 - 2013**

**TAMIL LANGUAGE**

**PAPER 2**

**PRIMARY 5**

NAME: ______________________________

CLASS: 5__________

DATE: ____________

DO NOT OPEN THIS BOOKLET UNTIL YOU ARE TOLD TO DO SO.
FOLLOW ALL INSTRUCTIONS CAREFULLY.
ANSWER ALL QUESTIONS.

| | |
|---|---|
| | 90 |


PARENT'S SIGNATURE : ____________________


P5 SA2

## P5 SA2
## COMPOSITION

கீழ்க் கொடுக்கப்பட்டுள்ள படங்களையும் சொற்றொடர்களையும் கொண்டு 100 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக :

<u>கட்டுரை 4</u>



கவர்ந்த கனி

வீடு நோக்கி

சோம்பல்

பணி முடிந்து

கவனக்குறைவாக

வழுக்கி

Q1 முதல் Q23 வரையுள்ள வினாக்களுக்கு OAS விடைத்தாளில் சரியான விடையின் எண்ணுள்ள (1, 2, 3 அல்லது 4) நீள்வட்டத்தை நிழலிடு.

' அ ' பிரிவு

A1 வேற்றுமை

**Q1 முதல் Q6 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான வேற்றுமை உருபு ஏற்ற சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (12 மதிப்பெண்கள்)**

மன்னன் சாலமன் கூரிய மதிநுட்பம் உள்ளவன். அரசி Q1. __________ அறிவைச் சோதிக்க விரும்பினாள். ஒருநாள் அவள் Q2. __________ இரு மாலைகளை நீட்டினாள். ஒன்று இயற்கை Q3. __________ ஆனது. மற்றொன்று காகிதப் பூக்களால் ஆனது. இரண்டும் ஒரே மாதிரியாக இருந்தன. அவள் மன்னரிடம் Q4.__________ உண்மையான பூக்களால் ஆன மாலையைக் கண்டுபிடிக்க கூறினாள். மன்னன் இரண்டையும் பார்த்துவிட்டு வேறுபடுத்த முடியாத நிலையில் இருந்தார். அப்போது அரசர் Q5. __________ நோக்கி இருந்த சன்னலைத் திறந்துவிடச் சொன்னார். வேலையாளும் அவ்வாறே செய்தான். அத்தோட்டத்தில் பறந்து கொண்டிருந்த தேனீக்கள் சன்னல் வழியே பறந்து வந்து உண்மையான மலர்களால் ஆன மாலையில் அமர்ந்தன. இதனால் அரசர் சுலபத்தில் உண்மையான மலர்களால் ஆன மாலையைக் கண்டுபிடித்தார். அரசியும் Q6. __________ கூர்மையான அறிவை மெச்சினாள். அவன் அறிவாளி என்பதை ஒப்புக்கொண்டாள்.

Q1. (1) அவரை
(2) அவரது
(3) அவரிடம்
(4) அவரால்

( )

Q2. (1) சாலமனை
(2) சாலமனால்
(3) சாலமனிடம் ( )
(4) சாலமனுக்கு

Q3. (1) பூக்களை
(2) பூக்களில்
(3) பூக்களின் ( )
(4) பூக்களால்

Q4. (1) இவற்றில்
(2) இவற்றின்
(3) இவற்றால் ( )
(4) இவற்றிற்கு

Q5.(1) தோட்டத்திற்கு
(2) தோட்டத்தின் ( )
(3) தோட்டத்தை
(4) தோட்டத்தில்

Q6.(1) மன்னனுக்கு
(2) மன்னனின்
(3) மன்னனிடம் ( )
(4) மன்னன்

/ 12

## A2 செய்யுள் / பழமொழி

Q7 முதல் Q12 வரையுள்ள செய்யுள் /பழமொழியை நிறைவு செய்வதற்கு ஏற்ற சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு.

(12 மதிப்பெண்கள்)

Q7. இளமையில் சோம்பல் முதுமையில் __________

(1) வருத்தம்
(2) வறுமை
(3) இனிமை
(4) வளமை

( )

Q8. மகன் தந்தைக்கு ஆற்றும் __________ இவன் தந்தை என் நோற்றான் கொல் எனும் சொல்.

(1) உபகாரம்
(2) சேவை
(3) உதவி
(4) கடமை

( )

Q9. காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும் __________ மாணப் பெரிது.

(1) ஞாலத்தின்
(2) உலகத்தின்
(3) ஞானத்தின்
(4) வானத்தின்

( )

Q10. எரிகிற விளக்கானாலும் __________ வேண்டும்.

(1) வேண்டுகோள்
(2) தூண்டுகோல்
(3) வைக்கோல்
(4) அளவுகோல்

( )

Q11. அடக்கம் ஆயிரம் __________ தரும்.

(1) தங்கம்
(2) பொன்
(3) மணி
(4) பவளம்

( )

Q12. உண்டிக்கு அழகு __________ உண்டல்

(1) உறவினரோடு
(2) நண்பர்களோடு
(3) விருந்தோடு
(4) குடும்பத்தோடு

( )

/12

## B3 தெரிவுவிடைக் கருத்தறிதல்

**பின்வரும் கதையைக் கருத்தூன்றிப் படி.**

பொதுமக்கள் குளிப்பதற்காக அனைத்து வசதிகளும் நிறைந்த குளியல் அறைகள் அந்த நகரம் முழுவதும் இருந்தன. அவற்றினுள் ஒன்றில் வேலப்பர் என்ற முதியவர் குளிக்கச் சென்றார்.அவருடைய ஏழ்மைத் தோற்றத்தைக் கண்ட அங்குள்ள ஊழியர்கள், ஒரு சிறு சோப்பையும் உடம்பைத் துடைத்துக்கொள்ள அழுக்கான துண்டையும் கொடுத்தனர்.

வேலப்பர் முகம் சுளிக்காமல் குளியலை முடித்துக்கொண்டு புறப்பட்டார். அப்போது அங்கிருந்த ஊழியர்களுக்கு ஒரு தங்க நாணயத்தை ***அன்பளிப்பாகக்*** கொடுத்துவிட்டுச் சென்றார். அதைச் சற்றும் எதிர்பாராத ஊழியர்கள் வேலப்பரை ***அலட்சியப்படுத்தியதற்காகப்*** பெரிதும் வருந்தினர். வேலப்பரை நல்ல முறையில் உபசரித்திருந்தால் மேலும் சில நாணயங்கள் அன்பளிப்பாகக் கிடைத்திருக்குமே என்று கவலைப்பட்டனர்.

சில நாள்களுக்குப் பிறகு வேலப்பர் அதே குளியலறைக்குக் குளிக்கச் சென்றார். அவரை அடையாளம் கண்டுகொண்ட ஊழியர்கள், அவரை மிகுந்த மரியாதையுடன் வரவேற்று, புத்தம்புதிய துண்டையும் நறுமணம் மிக்க சோப்பையும் கொடுத்து உபசரித்தனர். குளியலை முடித்துக்கொண்டு திரும்பும்போது, அங்கிருந்த ஊழியர்களுக்குச் சாதாரண காசுகளை அன்பளிப்பாகக் கொடுத்தார் வேலப்பர். தங்க நாணயங்களை அன்பளிப்பாக எதிர்பார்த்த ஊழியர்கள் ஏமாற்றமடைந்து வேலப்பரை ***வியப்போடு*** பார்த்தார்கள்.

"என்ன விழிக்கின்றீர்கள்? அன்று நான் கொடுத்த தங்க நாணயத்தை இன்றைக்குரிய அன்பளிப்பாக வைத்துக்கொள்ளுங்கள்! இன்று நான் கொடுத்த சாதாரண காசுகளை அன்றைக்குள்ள அன்பளிப்பாக நினைத்துக்கொள்ளுங்கள்!"என்றார் வேலப்பர். தோற்றத்தைப் பார்த்து உபசரித்த குற்றத்தை உணர்ந்த ஊழியர்கள் தம் செயலுக்காக வெட்கித் தலை குனிந்தனர்.

Q13 முதல் Q17 வரையுள்ள வினாக்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியையொட்டி அமைந்துள்ளன. ஒவ்வொரு வினாவிற்கும் உரிய மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (10 மதிப்பெண்கள்)

Q13 வேலப்பருக்கு ஏன் ஊழியர்கள் அழுக்குத் துண்டைக் கொடுத்தனர்?

(1) அவரை ஒரு ஏழை என்று எண்ணியதால்
(2) அவரை அவர்கள் முன்னர் பார்த்திராததால்
(3) அவரை அவர்கள் வெறுத்ததால்
(4) அவரை அவர்கள் யார் என்று அறியாததால்

( )

Q14 ஒரு தங்க நாணயத்தை வேலப்பர் அன்பளிப்பாகக் கொடுத்துவிட்டுச் சென்றபின் ஊழியர்கள் என்ன செய்தனர்?

(1) அவரை நன்கு உபசரிக்க எண்ணினர்
(2) அவரைப் புகழ்ந்து பேசினர்
(3) அவரை அலட்சியப்படுத்தியதை எண்ணி கவலைப்பட்டனர்
(4) அவரிடம் மன்னிப்புக் கேட்க முடிவு செய்தனர்

( )

Q15 மீண்டும் வேலப்பர் குளியலறைக்கு வந்தபோது ஊழியர்கள் அவரை ஏன் வரவேற்று உபசரித்தனர்?

(1) அவர் அவர்களை மெச்சியதால்
(2) அவர் யார் என்பதை அவர்கள் அறிந்ததால்
(3) அவர் விலையுயர்ந்த ஆடைகள் அணிந்திருந்ததால்
(4) அவர் அவர்களிடம் தாம் யார் என்பதைக் கூறியதால்

( )

Q16 ஊழியர்கள் ஏமாற்றம் அடைந்ததற்குக் காரணம் என்ன?

(1) வேலப்பர் அவர்களை ஏசியதே
(2) அவர்களுக்கு ஒன்றும் கிடைக்காததே
(3) அவர்கள் தங்க நாணயங்கள் எதிர்பார்த்ததே
(4) வேலப்பர் அவர்களுக்குச் சாதாரண நாணயங்களைக் கொடுத்ததே

( )

Q17 ஊழியர்கள் எதற்கு வெட்கப்பட்டனர்?

(1) தோற்றத்தைப் பார்த்து ஒருவரை மதிப்பிட்டதற்கு
(2) வேலப்பரை உபசரித்ததற்கு
(3) பரிசு கிடைக்காமல் போனதற்கு
(4) ஏழைகளை அவமதித்ததற்கு

( )



/ 10

## B4 சொற்பொருள்

Q18 முதல் Q20 வரையுள்ள சொற்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியில் இடம்பெற்றவை. அவற்றின் பொருளை உணர்த்தும் சரியான சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு.

(6 மதிப்பெண்கள்)

Q18 அன்பளிப்பாக

(1) காணிக்கையாக
(2) வெகுமதியாக
(3) பரிசாக
(4) சன்மானமாக

( )

Q19 அலட்சியப்படுத்தியதற்காக

(1) மதித்ததற்காக
(2) பேணியதற்காக
(3 கவனித்ததற்காக
(4) உதாசினப்படுத்தியதற்காக

( )

Q20 வியப்போடு

(1) ஆச்சரியத்தோடு
(2) பயத்தோடு
(3) பதற்றத்தோடு
(4) அதிர்ச்சியோடு

( )

/ 6

## B5 கருத்து விளக்கப்படக் கருத்தறிதல்

**பின்வரும் விளம்பரத்தைக் கருத்தூன்றிப் படி:**

கருத்து விளக்கப்பட கருத்தறிதல்

# பொங்கல் தின கொண்டாட்டம்

**தெம்பனீஸ் சமூக மன்றத்தில்**

தேதி 25 ஜனவரி 2013
(வார இறுதி நாள்)
வெள்ளிக்கிழமை
நேரம் மதியம் 2 மணி முதல்
மாலை 6 மணி வரை

சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை எல்லா இனத்தவரும் பொங்கல் நிகழ்ச்சியில் கலந்து கொள்ளலாம் .

**அனுமதி இலவசம் !!**

நிகழ்வுகள்


2.00 மணிக்கு : சிறப்பு விருந்தினர் உரை

2.30 மணிக்கு : பொங்கல் வைத்தல்
3.00 மணிக்கு : கோலப் போட்டி
(தொடக்கப் பள்ளி மாணவர்களுக்குமட்டும்)
3.30 மணிக்கு : பால்காரர் பசுவிடமிருந்து பால் கறப்பதைப் பார்வையிடுதல்
(மணி பால்பண்ணை)
4.00 மணிக்கு : கோலப் போட்டியின் முடிவுகள்
5.00மணிக்கு : கிராமிய பாடல்களும் நடனங்களும் ( மேரின் உயர்நிலைப்பள்ளி )
6. மணிக்கு : இலவச நினைவு பொருள்கள் வழங்க பெற்று, நிகழ்ச்சி நிறைவு பெறும்.

✓ தோரணம் பின்னுதல்
✓ பூக்கட்டுதல்
✓ வண்ண கோலம் போடுதல்
✓ மருதாணி இடுதல்

போன்ற பல்வேறு கலைகளைக் கற்றுக் கொள்ள அரிய வாய்ப்பு

நினைவுப் பொருட்களை
வழங்கும் லட்சுமி
நகைகடைக்கு நன்றி !!



Q21 முதல் Q23 வரை இடம்பெற்றுள்ள வினாக்கள் முன்பக்கத்தில் தரப்பட்டுள்ள விளம்பரத்தை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளன. ஒவ்வொரு வினாவிற்கும் உரிய மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (6 மதிப்பெண்கள்)

Q21. பொங்கல் நிகழ்ச்சி எப்போது நடைபெறும் ?

(1) பள்ளி விடுமுறையின்போது
(2) பொது விடுமுறையின்போது
(3) நோன்பு பெருநாளில்
(4) வார இறுதி நாளில்

( )

Q22. கோலப் போட்டியில் யார் கலந்து கொள்ளலாம் ?

(1) சிறுவர்கள்
(2) முதியவர்கள்
(3) உயர்நிலைப்பள்ளி மாணவர்கள்
(4) தொடக்கப்பள்ளி மாணவர்கள்

( )

Q23. நினைவுப் பொருளை வழங்கும் ஆதரவாளர் யார் ?

(1) மணி பால் பண்ணை
(2) லட்சுமி நகைக்கடை
(3) மேரின் உயர்நிலைப்பள்ளி
(4) சிறப்பு விருந்தினர்

( )

6

‘ஆ’ பிரிவு

ஒலி வேறுபாட்டுச் சொற்கள்

பின்வரும் பகுதியில் **24** முதல் **28** வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்குப் பொருத்தமான ஒலி வேறுபாட்டுச் சொற்கள் இப்பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன.
அவற்றிலிருந்து ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கு ஏற்ற மிகச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது.
(10 மதிப்பெண்கள்)

24. மாதவன் தவறி சேற்று நீரை மிதித்து விட்டான். அதனால், அவன் சட்டையில் ____________________ படிந்து விட்டது. **24 ( )**

25. உடற்பயிற்சி வகுப்பு அப்போதுதான் முடிந்தது. உடனே சில மாணவர்கள் குளிர் ____________________ விற்கும் கடையை நோக்கி விரைந்தனர். **25 ( )**

26. பொங்கல் விழா தை மாதம் முதல் நாள் கொண்டாடப்படுகிறது. அவ்விழாவை முன்னிட்டு சமூக நிலையங்களில் ____________ நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. **26 ( )**

27. அன்று பள்ளி பரிசளிப்பு விழா. தலைமை ஆசிரியரின் சிறப்பு ________________ பிறகு மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. **27 ( )**

28. டிசம்பர் மாதம் முழுவதும் கனத்த மழை பெய்தது. அதனால் பல இடங்களில் ____________________ ஏற்பட்டது. **28 ( )**

| | |
|---|---|
| 1. உரைக்கு | 2. வெள்ளம் |
| 3. கரை | 4. கலை |
| 5. வெல்லம் | 6. பாணம் |
| 7. களை | 8. உறைக்கு |
| 9. பானம் | 10. கறை |

முன்னுணர்வுக் கருத்தறிதல்

பின்வரும் பகுதியில் **29** முதல் **35** வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு ஏற்ற சொற்கள் இப்பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கு ஏற்ற மிகச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது. (14 மதிப்பெண்கள்)

| | |
|---|---|
| வயதான செல்வந்தர் ஒருவர், தாம் சம்பாதித்தச் சொத்தைத் தங்கக்காசுகளாக மாற்றினார். அவற்றை அவர் மூன்று பானைகளில் அடைத்து தம் தோட்டத்தில் புதைத்தார். சில நாட்களில் அவர் உடல்நிலை __(29)__ படுத்த படுக்கையானார். அப்போது அவர் தமது மூன்று மகன்களையும் தன்னருகில் அழைத்தார். தங்கக்காசுகள் இருக்கும் இடத்தைக் கூறினார். பின் "நீங்கள் ஆளுக்கொரு பானையை எடுத்துக்கொள்ளுங்கள்," என்று தம் மைந்தர்களிடம் சொல்லிவிட்டு இறந்தார். யார் யாருக்கு எந்தப் பானை, என்று சொல்லாமலே தந்தை இறந்துவிட்டாரே என்று மூன்று மகன்களும் வருந்தினர். __(30)__ மூவரும் அந்தப் பானைகளைப் பார்த்ததில்லை. பானைகள் பெரிதும் சிறிதுமாக இருக்கும் என்று நினைத்தார்கள். யாருக்குப் பெரிய பானை என்ற __(31)__ ஏற்பட்டது. மூத்தவன் தானே __(32)__ பிள்ளை என்பதால் தனக்குத்தான் பெரிய பானை என்று கூறினான். நடுமகன் தனக்கு வசதி __(33)__ என்பதால் பெரிய பானை தனக்கே என்று சொன்னான். கடைசி மகன் தான்தான் செல்லப்பிள்ளை என்றும் தனக்குத்தான் பெரிய பானை என்றும் வாதாடினான். வாய்ச் சண்டை கை சண்டையானது. பின் சண்டை ஓய்ந்தது. மூவரும் தந்தை __(34)__ இடத்திற்குச் சென்று தோண்டிப் பார்த்தார்கள். அங்கே பானைகள் மூன்றும் சமமாகவே இருந்தன. அவற்றுள் தங்கமும் ஒரே __(35)__ இருந்தன. மூன்று சகோதரர்களும் தாங்கள் வீணாகச் சண்டை போட்டதை எண்ணி வருந்தினர். | **29** (   )<br>**30** (   )<br>**31** (   )<br>**32** (   )<br>**33** (   )<br>**34** (   )<br>**35** (   ) |

| | | |
|---|---|---|
| 1. குறிப்பிட்ட | 2. ஏனெனில் | 3. அதனால் |
| 4. வாக்குவாதம் | 5. கனம் | 6. குறைவு |
| 7. அளவு | 8. முதல் | 9. கலகம் |
| 10. நிறைவு | 11. சோர்வாகி | 12. மோசமாகி |

*கருத்தறிதல்*

பின்வரும் பகுதியைக் கருத்தூன்றிப் படி.

வெகுகாலத்திற்கு முன்பு அரேபிய அரசனிடம் அலி என்ற விகடகவி ஒருவன் இருந்தான். அலி சிரிக்கச் சிரிக்கப் பேசுவான். பிறரைச் சிரிக்க வைத்து மகிழ்ச்சியடைவான். எப்போதும் அவன் கலகலப்பாகக் காணப்படுவான். ஆகவே, மக்கள் அவனை மிகவும் விரும்பினர்.

அலி தன் தலையில் எப்போதும் ஒரு பச்சை நிறத் தொப்பி அணிந்து இருப்பான். அதை அவன் எப்போதும் கழற்றுவதே இல்லை. அந்தத் தொப்பி தனது துணிவின் அடையாளம் என்று கூறிக் கொள்வான். தனது அரண்மனையில் அலி தனக்குச் சமமாகத் தொப்பியுடன் திரிவதை மன்னன் சிறிதும் விரும்பவில்லை. ஆனால், அலியின் அறிவுக்கூர்மை, துணிவு, அன்பு ஆகிய பண்புகள் காரணமாக அரசன் அதைப் பொருட்படுத்தாமல் இருந்து வந்தான்.

அலி துன்பப்படுபவர்களுக்கு ஆறுதல் சொல்வான்; தன்னால் இயன்ற உதவிகளையும் செய்வான். இதனால் அலியின் புகழ் வெகு விரைவில் எங்கும் பரவலாயிற்று. மக்கள் அவனைக் காணவும் பேசவும் வெள்ளம் போல் திரண்டனர். அரண்மனையில் அரசனைப் பார்ப்பவர்களைவிட, அலியைக் காண வருபவர்கள் தான் அதிகமாயினர். இதனால் அரசனுக்கு அலியின் மீது பொறாமை ஏற்பட்டது. அலியை ஒதுக்கத் தொடங்கினான்; இகழ்ந்து அவமானப்படுத்தினான்; அவனைப் பழிவாங்கத் திட்டமிட்டான்.

ஒரு நாள், மன்னனைத் தவிர வேறு யாரும் தலையில் தொப்பி அணியக்கூடாது என்றும் அப்படி அணிந்தால் அவரது தலை வெட்டப்படும் என்றும் அரசன் அறிவிப்பு செய்தான். அலி சிறிதும் அஞ்சாமல் தொப்பி அணிந்து கொண்டு அரண்மனைக்கு வந்தான். அரண்மனைக் காவலர்கள் அலியைக் கைது செய்து சிறையில் அடைத்தனர். இதை எதிர்ப்பார்த்திருந்த அரசன் அவனுக்கு மரண தண்டனை விதித்தான்.

இதை அறிந்த மக்கள் கூட்டங் கூட்டமாக அரண்மனைக்குச் சென்று அலியை விடுதலை செய்யும்படி கூறினர். அப்படி இல்லாவிட்டால் அரசனை பதவியிலிருந்து துரத்திவிடுவோம் என்று பயமுறுத்தினர். அலியின் நல்ல குணங்களே மக்களிடம் இத்தகைய மதிப்பையும் பற்றுதலையும் உண்டாக்கியிருந்தன என்பதை அரசன் உணர்ந்து கொண்டான். தன் தவற்றுக்காக மனம் வருந்திய அரசன் அலியை விடுதலை செய்தான்.

36 முதல் 40 வரையுள்ள வினாக்களுக்கு மேற்கண்ட பகுதியிலிருந்து விடைகளைக் கண்டறிந்து எழுது. (20 மதிப்பெண்கள்)

36. மக்கள் அலியை விரும்பியதன் காரணம் என்ன? (4)

________________________________________________

________________________________________________

________________________________________________

37. அரசன் ஏன் அலி பச்சைத் தொப்பி அணிந்திருப்பதை பொருட்படுத்தவில்லை? (4)

________________________________________________

________________________________________________

________________________________________________

38. பொறாமைக் கொண்ட அரசன் அலியை என்ன செய்தான்? (4)

39. அரசன் செய்த அறிவிப்பு என்ன ? (4)

40. அரசன் அலியைப் பற்றி என்ன தெரிந்து கொண்டான்? (4)

முற்றும்

## P5 SA2
## TESTPAPER 12

மன்னன் சாலமன் ...

1)2 2)3 3)4 4)1 5)3 6)2 7)2 8)3 9)1 10)2 11)2 12)3 13)1 14)3 15)2

16)4 17)1 18)3 19)4 20)1 21)4 22)4 23)2 24)10 25)9 26)4 27)1 28)2 29)12 30)2

31)4 32)8 33)6 34)1 35)7

36)அலி ஒரு விகடகவி.அவன் சிரிக்கச் சிரிக்கப் பேசுவான்.பிறரைச் சிரிக்க வைத்து மகிழ்ச்சியடைவான்.எப்போதும் அவன் கலகலப்பாகக் காணப்படுவான்.இதுவே மக்கள் அலியை விரும்பியதன் காரணம்.

37)அலியின் அறிவுக்கூர்மை, துணிவு, அன்பு ஆகிய பண்புகள் காரணமாக அரசன் அலி பச்சைத் தொப்பி அணிந்திருப்பதைப் பொருட்படுத்தவில்லை.

38)பொறாமை கொண்ட அரசன் அலியை ஒதுக்கத் தொடங்கினான்.இகழ்ந்து அவமானப்படுத்தினான்.அவனைப் பழி வாங்கத் திட்டமிட்டான்.

39)மன்னனைத் தவிர வேறு யாரும் தலையில் தொப்பி அணியக் கூடாது என்றும் அப்படி யாராவது அணிந்தால் அவரது தலை வெட்டப்படும் என்பதே அரசன் செய்த அறிவிப்பு ஆகும்.

40)அரசன் அலியை கைது செய்த போது மக்கள் அவனை விடுதலை செய்யக் கூறினர்.இல்லாவிட்டால் அரசனைப் பதவியிலிருந்து துரத்திவிடுவோம் என்று பயமுறுத்தினர்.அலியின் நல்ல குணங்களே மக்களிடம் இத்தகைய மதிப்பையும் பற்றுதலையும் உண்டாக்கியிருந்தன என்பதை அரசன் தெரிந்து கொண்டான்.